**Sub Court, Eraniel**

**O.S. No.** 38/ 2022
**Date**: 13.06.2025.
வா.சா.1 - திரு. குமாரபெருமாள்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு பொதுஅதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த தேதிக்கு பின்னர் தான் சொத்து விபரங்கள் மற்றும் வழக்கு பற்றி விபரங்கள் எனக்கு தெரியும் என்றால், சரியல்ல அதற்கு முன்பே சொத்து பற்றிய விபரங்கள் தெரியும், வழக்கு தாக்கல் செய்த பின்பு அதன் விபரங்கள் எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ– 14 பொது அதிகார ஆவணத்தில் உறவினர் என்றோ உறவு முறை குறிப்பிட்டோ பதிவு செய்யப்படவில்லை என்றால், சரிதான். வழக்கின் 2 வது பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நான் படித்து பார்த்திருக்கிறேன். தற்போது நினைவில் இல்லை. வழக்கு போடுவதற்கு வழக்கறிஞருக்கு விபரங்கள் சொல்லிகொடுத்தது எனது மாமியார் ராஜேஸ்வரி. வழக்குரையில் சொல்லப்பட்டிருக்கும் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். எனக்கு திருமணம் 1997 ல் நடந்தது. நான் பிகாம் படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும 2 ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் வழக்கு சொத்திற்கும் தங்களுடைய நிர்வாகத்திற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டுக்கிறார் என்றால், சாட்சி எதிர்வழக்குரையை பார்த்து எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என்று கூறுகிறார். நான் முன்பு படித்து பார்த்த எதிர்வழக்குரை தமிழில் இருந்ததா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. எனது மாமியார் தாக்கல் செய்த வழக்குரை என்ன மொழியில் இருந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை. 1997 வருடத்திற்கு முந்தைய சம்பவங்கள் பற்றிய விபரங்கள்

எனக்கு தெரியாது என்றால், சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் , சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனக்கு தெரியாத சம்பவங்களை நான் குறிப்பிட்டிருப்பதாலும், வழக்கு விபரங்கள் எனக்கு சரியாக தெரியாது என்ற நிலையில், எனக்கு சாட்சியம் அளிக்க தகுதி இல்லை என்றால், சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1966ம் ஆண்டிற்குரிய அசல் ஆவணங்களை நான் பார்த்ததில்லை. அதற்கு முந்தைய ஆவணங்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனவே இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவோ, மேலும் வழக்கு நடத்தவோ எனக்கு தகுதியில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.